“கொரியாப் போர் உலகப் போராக மாறுது”

Phone No 4502 | Regd. No. M. 5458
விலை அரை அணா | இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. | MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (4—7—50) | வெளியூர் (5—7—50) | இதழ் 295

உலகம் சமதர்ம கோட்டையாக மாறிவருகிறது

—————(0)—————

முதலாளித்வத்தின் ஆர்ப்பாட்டம் கண்டு அஞ்சவேண்டாம்

ரஷியாவின் மனிதத்தன்மையே அமைதியைப் பாதுகாக்கிறது

இதாலிய கம்யூனிஸ்டு தலைவரின் கருத்துரைகள்

“இன்று கொரியாவில் நடைபெறும் போர், உலகப்போராக மாறும் என்று சொல்லிவிட முடியாது. ஏனெனில் இன்று உலகிலேயே மிகப்பலம் பொருந்திய நாடாகத் திகழ்வது ரஷியா, ரஷியா மனித உள்ளம் படைத்த மனிதர்களால் ஆளப்பட்டுவரும் நாடு”

இது, அண்மையில் இத்தாலிய கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் தோழர் சிக்னோர் பால்மிரோ தாக்லியாத்தி, இத்தாலிய கம்யூனிஸ்டுகளிடம் பேசியபோது வெளியிட்ட கருத்து.

மேலும், தோழர் சிக்னோர் தாக்லியாத்தி “இனிட்டா” என்னும் இத்தாலிய கம்யூனிஸ்டு கட்சி செய்தித்தாளில் எழுதியிருப்பதாவது:-

“அகில உலகிலும், மக்கள் சமதர்மக் கொள்கைக்கே ஆதரவு தருபவர்களாக இருக்கின்றனர். உலக சக்திகளனைத்தும், சமதர்மகூட்டு முன்னணிகள் பக்கமே உள்ளன. காலம் செல்லச் செல்ல, சோவியத் யூனியனால் உருவாக்கப்பட்டு வரும் இந்தக் கூட்டு முன்னணிக்கே ஆதரவு பெருகும் என்பது திண்ணம்.

இங்ஙனம் வளர்ந்து வரும் சமதர்மக் கொள்கையினைக் கண்டு, முதலாளித்வ ஆளும் வர்க்கத்தின் அறிவு, தடுமாற்றமடைகிறது சமதர்மக கோட்டையைத் தகர்க்க அவர்கள் படாதபாடுகள் படுகின்றனர். என்னென்ன கொடுஞ் செயல்களை மேற்கொள்ளலாமோ அவற்றையெல்லாம் மேற்கொள்ளுகின்றனர். நல்லவேளையாக சோவியத் தலைவர்கள் இது கண்டு தங்களுடைய மதியை இழக்காமல், முதலாளி வர்க்கத்தை எதிர்த்துப் போரிடும் முயற்சியில், சற்றும் உள்ளஉறுதி குலையாமல்நின்று அமைதிக்கு வழிகோலிவருகின்றனர்

ஒரு முக்கியமான கம்யூனிஸ்டு தலைவன் என்ற முறையிலே கூறுகிறேன், சோவியத் நாட்டுத் தலைவர்களின் மனிதத் தன்மைதான், இன்றையத்தினம் மேற்கு ஐரோப்பாவின் நாகரிகம் காப்பாற்றப்பட்டு வருகிறது. அஃதின்றேல் மேலை நாட்டு நாகரிகமே இந்நேரம் சிதைந்து போயிருக்கும்”

தோழர் சிக்னோரின் இந்த கருத்துரையைக்காரணமின்றி, கருத்தின்றி, நச்சுக் கருத்தொடு சோவியத் ஆட்சியாளரையும், ஆட்சி முறையினையும் தூற்றித் திரியும் முதலாளித்வத்தின் முன்னோடும் பிள்ளைகளுக்கு அப்படியே அர்ப்பணம் செய்ய விழைகிறோம்.

ரஷியாவா! அடேயப்பா! ஆதிக்க வெறிபிடித்த நாடாயிற்றே! ஸ்டாலின், பொல்லாத மனிதராயிற்றே! ரஷியாவின் ஆதிக்க காரணமாகவே இன்று, கொரியாவில் போர் மூண்டிருக்கிறது; விரைவில் இஃதோர் உலகப் போராக மாறக்கூடும். வருகிறது

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

இந்திய அரசியலாரின் முற்போக்கு!

புதுடில்லி, ஜூலை 2—
டில்லியில் நடைபெறவிருக்கும் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் மாநாட்டில் கலந்து கொள்ளவிருந்த 4 சோவியத் எழுத்தாளர்களுக்கு இந்திய சர்க்கார் அனுமதி சீட்டு தர மறுத்துவிட்டதாம்.

படைபலம் வேண்டுமானால் தருகிறேன்

——

ஷியாங்கின் வீரம்!

வாஷிங்டன், ஜூலை 3—
தென்கொரியாவின் உதவிக்காக, போர்மோசாவிலிருந்து 20000 துருப்புகளை அனுப்புவதாக சியாங்கேஷேக் கூறியதாகவும், ஆனால் அவ்வுதவி வேண்டியதில்லை என்று நிராகரிக்கப்பட்டுவிட்டதாகவும் வாஷிங்டனிலுள்ள ‘தனோப்’ நிருபர் அறிவிக்கிறார்.

மீண்டும் தேசிய கம்யூனிஸ்டுகளை அழைத்து, இந்நடவடிக்கைகளில் ஈடுபடுத்தினால் அதை ஒரு காரணமாகக் கொண்டு, சீன கம்யூனிஸ்டுகள் போரில் இறங்குவதைத் தடுக்கவே சியாங்கின் உதவி மறுக்கப்பட்டிருப்பதாக தெரிகிறது.

லெபனானில் வேலை நிறுத்தம்?

பீரட் ஜூலை 3—
லெபனான் சர்க்காரின் பொருளாதாரக் கொள்கையை ஆட்சேபித்து, வேலைநிறுத்தம் செய்யப்போவதாக லெபனீஸ் கைத்தொழில் பெடரேஷன் ஒரு கூட்டத்தில் அறிவித்திருக்கிறது.

சர்க்காரை வற்புறுத்திசெய்யப்பட்ட இதர தீர்மானங்களாவன:—

[illegible]ண்டமாற்று முறையில், இதர நாடுகளுடன் வர்த்தகம் செய்ய, லெபனான் அந்த நாடுகளுடன் உடன்படிக்கை [illegible]துகொள்ளவேண்டும்.

[illegible] வஸ்துக்களின் விலைகளை [illegible]கார் குறைக்க வேண்டும்.

மூலப்பொருள்கள் எதற்கும் சுங்கவரி விதிக்கலாகாது.

ரஷ்யாவும் செஞ்சீனாவும் அடுத்து செய்யப்போவதென்ன?

…………(—)…………

யு. எஸ். பிரிட்டன் ஆலோசனை

லண்டன், ஜூலை 3—
கொரியாவில் மக் ஆர்தர் சீக்கிரத்தில் வெற்றிபெறுத பட்சத்தில், ஐரோப்பா மத்ய கிழக்கில் ரஷ்யாவும், தென்கிழக்கு ஆசியாவில் பல இடங்களில் கம்யூனிஸ்டு சீனாவும் பாயலாம் என்று சொல்லப்படுவது குறித்து யுனைடெட் ஸ்டேட்ஸும், பிரிட்டனும் தீவிரமாக ஆலோசித்து வருகிறது என்றும். இவ்விரு சர்க்காராகளும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன வென்றும் லண்டன் டெய்ஸ்பாட்ச் ராஜதந்திர நிருபர் கூறுகிறார்

கொரியாவில் யுனைடெட் ஸ்டேட்ஸின் வெற்றி துரிதமாக ஏற்பட்டால், வடகொரியாவுக்கு தான் அளித்த ஆதரவை ரஷ்யா வாபஸ்பெற்றுவிடக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் கொரியாவில் போருக்கு நீண்டகாலமாகவே ரஷ்யா திரைமறைவிலிருந்து தயார் செய்து வந்திருப்பதால், அங்கு யு. எஸ். வெற்றிசீக்கிரம் பெறமுடியுமா என்பது அவ்வளவு எளிதில் சொல்லிவிட முடியாது என்று அவர் கூறுகிறார்.

ரஷ்யா ஐரோப்பாவில் யூகோஸ்லாவியா, ஆஸ்திரியா, ஜெர்மனி அல்லது மத்ய கிழக்கில் பர்ஷியா இவை ஏதாவது ஒன்றின்மீதும் செஞ்சீனர்கள், ஹாங்காங், இந்தோசீனா, மலேயா இவை ஒன்றின்மீதும் படையெடுக்கலாம் என்று வாஷிங்டனில் கருதப்படுகிறது.

——

ஸ்வான் விமான நிலையத்தில் குண்டு வீச்சு

டோகியோ, ஜூலை 3—
ஸ்வான் விமான நிலையத்தின் முன்னணிவரைத் தாக்கிய தவட கொரிய விமானங்கள் என்று சொல்லப்பட்டபோதிலும், அந்த விமானங்களின் இறக்கைகளில் ரஷ்ய விமானங்களுடைய சின்னமான செப்பு நட்சத்திரம் காணப்பட்டதென்று அதைப்பார்த்தவர்கள் கூறுகிறார்கள்.

கொரியா போரை நிறுத்த ரஷியா ஒத்துழைக்கலாகாதா?

——(…)——

பிரிட்டிஷ் தூதுவர் மாஸ்கோவிடம் கெஞ்சுகிறார்

லண்டன் ஜூலை 3—
கொரியா தகராறை நிறுத்த, ரஷியா ஒத்துழைக்க வேண்டும் என்கிற பிரிட்டிஷ் விருப்பத்தை ரஷிய சர்க்காரிடம் அறிவிக்க, மாஸ்கோவிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானீகர் சர் டேவிட்கெல்லி முயன்று வருகிறார். ஆனால் அவருக்குப் பேட்டியளிக்காமல் ரஷியா தட்டிக்கழித்து வருகிறதாம்.

ரஷிய அயல்நாட்டு மந்திரி விஷின்ஸ்கியோ அல்லது அவருடைய உதவி மந்திரி குரோமிகோவோ மாஸ்கோவில் இல்லை. இப்பொழுது ரஷிய அயல்நாட்டிலாகாவிலுள்ள உயர்ந்த அதிகாரி பாவ்லோவ் என்பவர் தானும். ஆனால், அவர் பேட்டி கூட பிரிட்டிஷ் ஸ்[illegible]னீகருக்குக் கிடைக்கவில்[illegible]

சிங்கப்பூரில் பிரிட்டிஷ் தளபதி

சிங்கப்பூர், ஜூலை 3—
பிரிட்டிஷ் சேனாதிபதி பீல்ட் மார்ஷல் ஸ்லிம், இங்கு வந்து சேர்ந்திருக்கிறார். கொரியாப் போரினால் தன் திட்டம் எதுவும் பாதிக்கப்படவில்லை என்று அவர் கூறினார்.

கொரியாப் போரில் காம[illegible] வெல்த் படைகள் ஈடுப[illegible] என்று கேட்டதற்கு ஏதுவும் கூற மறுத்துவி[illegible] ‘வேண்டுமென்றால் [illegible] ரேலிய சர்க்காரைக் [illegible] நகள்’ என்று அவர் [illegible] ஆஸ்திரேலியாவிலும் [illegible] லாந்திலும் தான் நட[illegible] சம்பாஷணைகள் திருப்[illegible] மாகவே முடிந்தனவெ[illegible] அவர் கூறினார்.

உழைப்புக்கேற்ற ஊதியம் தருக!

——(0)——

சிங்கப்பூர் சர்க்கார் சிப்பந்திகளின் போர்முரசு

சிங்கப்பூர், ஜூலை 3—
வாழ்வதற்கு வேண்டிய சம்பளமும், நியாயமான உரிமைகளையும் தங்களுக்கு அளிக்க வேண்டும் என்று, சிங்கப்பூர் சர்க்கார் சிப்பந்திகள் கோரிவருகின்றனர். இவர்கள் யூனியன் போராட்ட நிதிக்குப் பணம் சேர்க்கிறது. இம்மாதிரி நிதிதிரட்டுவதிலிருந்து சர்க்கார்சிப்பந்திகள் ஸ்டிரைக் செய்வர் என்று எண்ணிவிடக்கூடாது என்று, அந்த சங்கத்தின் தலைவ[illegible] கூறுகிறார்.

கொரியாவுக்கு இரு நியூஜிலாந்து கப்பல்கள்

ஆக்லண்ட், ஜூலை. 3—
நியூஜிலாந்தின் இரு பிரிகேட் கப்பல்கள் நேராக ஹாங்காங்கிற்கு புறப்பட்டுவிட்டன. அவசியமானால், இவை நேராகவே கொரி[illegible]தேசத்திற்கு செல்லும். [illegible]டிக்கையில் உடனே [illegible]வதற்கான சாதனங்கள் [illegible]களில் உள்ளன. [illegible]ளோப்

மாலை மணி

சென்னை 4—7—50 செவ்வாய்க்கிழமை

புதுவழி காண வாரீர்!

இந்தியாவுக்கு ஒரு மொழி பொது மொழியாக இருக்க வேண்டும் என்ற பிரச்னைக்கு நிலை நாட்டமில்லை. இந்தியே பொது மொழியென எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது. இந்தி மொழி பேசாத மக்கள் வாழும் பகுதியில்கூட இந்தி புகுத்தப்பட்டுவிட்டது.

இந்தி மொழி பரவாத பகுதிகளில் வாழும் மக்கள் இந்தி மொழி கற்காவிடில்; மாகாண ஆட்சியிலும், மத்திய ஆட்சியிலும் பங்கு பெற முடியாமல் பின் தங்க நேரிடும் எனவே அனைவரும் இந்தி கற்க முற்படவேண்டுவது அவசியமாகும்."

ரேணுகுண்டை காங்கிரஸ் மைதானத்தில் நடைபெற்ற இந்தி மாணவர் கூட்டமொன்றில் பேசியபோது, சென்னை முதலமைச்சர் தோழர் குமாரசாமியார் பேசியிருக்கும் பேச்சுதான் மேலே தரப்பட்டிருப்பது.

அமைச்சர் திட்டமாகக் கூறிவிட்டார், இனி இந்தியே இந்நாட்டுப் பொது மொழியென்று. அதுமட்டுமல்ல, இந்தி படிக்கவேண்டுவது கட்டாயம் என்பதையும் காரண காரியங்களோடு விளக்கியும் கூறிவிட்டார் இந்தி கற்றால்தான் மத்திய ஆட்சியிலும், மாகாண ஆட்சியிலும் பங்கு பெற முடியும் என்று.

அமைச்சரின் இந்தப் பேச்சிலே இந்தி ஏகாதிபத்யத்தின் ஆணவம் தொனிக்கிறது; இந்தியைக் கட்டாயமாக ஏற்றுக்கொள்ளாதோர்க்கு இந்நாட்டிலே சட்டமான வாழ்வில்லை என்ற மொழி புதைந்துகிடக்கிறது.

"இந்திதான் பொது மொழி இனி. இதுபற்றிப் பேசத் தேவையில்லை" என்று அறுதியிட்டுக் கூறிவிட்டார் அமைச்சர் குமாரசாமியார். அமைச்சரின் இந்தத் தீர்ப்பு ஒரு புறமிருக்கட்டும். இந்திக்குத்தென்னாட்டில் எதிர்ப்பு இருந்து வருவதற்குரிய "கட்டாயம்" தொடர்ந்ததா என்பதே நாம் கவனிக்க வேண்டிய விஷயம்.

கடைமுறையிலே இந்தி கட்டாய பாடமாகப் புகுத்தப்பட்டுவிட்டது. 'இந்தி கற்றால் தான் ஆட்சியில் பங்கு உண்டு, இன்றேல் பின் தங்கிப் போவீர்" என்ற அமைச்சரின் வாக்கு, இதனை மேலும் உறுதிப்படுத்துவதாகிறது. சுருங்கச் சொல்லவேண்டுமானால், இந்தி ஏகாதிபத்தியம் [illegible]மொழியின் தன்மானத்துக்கு அறை[illegible] விடுகின்றது அளவுக்கு [illegible]க் கோலம் பூண்டுவிட்[illegible]ளனம்.

[illegible] பொது மொழியாகவிளங்[illegible] [illegible]த்தை அசற்றி[illegible] [illegible]ரையில் இந்தி [illegible]ச்சத் துறைகளி[illegible] [illegible]கள் செலுத்தும்படி [illegible]யபோக்குள்ளது. இது [illegible]த்தும், கருத்துக்கும் [illegible] ஆக்கவே என்பதுஒருபுறமிருக்கட்டும்;இந்தி மொழி கற்றால்தான் அரசியல் வாழ்வில் பங்கு உண்டு என்று, அடிக்கடி ஆட்சியாளர்சொல்லுகிறார்களே, அதன் கருத்தினைச் சற்று ஆராய்வோம்

இந்தியா ஒரு நாடல்ல; ஒரு துணைக்கண்டம்; பல இனம் பல மதங்களைக் கொண்ட தொகுதி பரந்த நிலப்பரப்பு இதனை நாம் பன்முறைசுட்டிக்காட்டியே இத்தகைய நாட்டிலே ஒரு பொதுமொழியினை நிலைபெறச்செய்வது கூடாது என்று கூறிவந்துள்ளோம் அப்படியிருந்தும் மொழிப் பிரச்னையிலே ஆட்சியாளர் கொண்டுள்ள ஆணவம் குறைந்தபாடில்லை. இது, திராவிட மக்களின் தன்மானத்தைப் பறிப்பதாகிறது.

எனவே, இப்பொழுது திராவிட மக்கள் முன் உள்ள பிரச்னை மொழிப் பிரச்னை அல்ல; தன்மானப் பிரச்னை என்று கொள்ளுதலே சாலப் பொருத்தமுடைத்தாகும் இதுகாறும் இந்தியால் தமிழ் கெடும் என்று நாம் பேசி வந்தோம். எனவேதான், சிறுவர்களிடையே அதனைப் புகுத்த வேண்டாம் என்றெல்லாம் கூறி வந்தோம். நமது கண்டனங்களுக்கெல்லாம் காது கொடாமல், ஆட்சியாளர் தாம் இட்டதே சட்டம் என்ற முறையிலே காரியங்களைச் செய்து வர ஆரம்பித்து. இந்தி கட்டாயம் என்ற தமது குறிக்கோளை நிலை நாட்ட ஆரம்பித்துவிட்ட இந்தக்கட்டத்திலே நாமும், நமது போராட்டத்தில் புது முறை காண வேண்டியவர்களாகவே இருக்கிறோம்

எனவே, இனி இந்தி ஏகாதிபத்யம் என்பது, வடநாட்டு அரசியல் ஏகாதிபத்யமே என்பதை, திராவிட மக்கள் உணரவேண்டும். கட்டாய இந்தி ஒழிந்து தமிழ்மொழி ஆக்கம்பெற வேண்டுமானால், வடநாட்டு அரசியல் ஏகாதிபத்யம் ஒழிந்து, தமிழரின் தனியாட்சி முறைக்கு வழிகோலப்படவேண்டும். அதாவது, நாம் பல்லாண்டுகளாக கூறிவரும் நாட்டுப் பிரிவினைத் திட்டம் ஈடேறவேண்டும் 'திராவிடநாடு திராவிடருக்கே'என்ற லட்சியம் நிறைவேற்றப்பட வேண்டும்.

சுருங்கச் சொல்லவேண்டுமானால், திராவிடநாட்டுப் பிரிவினைக்குவேண்டிய ஆக்கவேலைகளில், நாம் ஈடுபடவேண்டிய காலம் வந்துவிட்டதென்றே சொல்ல வேண்டும். எனவே, இனி நமது அரசியல் கொள்கையில் ஒரு புது முடுக்கு ஏறவேண்டும்; இலட்சியப் பாதையில் சற்று வேகமாக நாம் முன்னேற வேண்டும். அது வொன்றே இந்தி ஏகாதிபத்தை விரட்டியடிக்கும் புது முறையாகும். அத்தகைய புது முறைக்குப் புது வழிகாண வாரீர் என திராவிட மக்களை, சிறப்பாக இளைஞர்களை அழைக்கிறோம்.

கம்போடியா பருத்திப் பயிரிடல்

சென்னை, ஜூலை 3—

கோயம்புத்தூர் தாலுகாவில் 10½ ஏகரில் சென்னை சர்க்கார் விவசாய இலாகாவினர் 'உகந்தா முதல்தர' கம்போடியா பருத்தியை பரீக்ஷார்த்தமாக பயிரிட்டுப் பார்த்தனர். இந்த தாலுகாவில் போதிய தண்ணீர் சப்ளை இல்லாதிருந்தபோதிலும் இப்பருத்தி நன்றாக பயிராவதுடன் சீக்கிரமேபருத்தி விளைவதாகவும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

பருத்தி விளையும் இதே மண்ணில் 'சித்திரை சோளமும்' நன்றாக பயிராகிறதாம் ஆகவே இங்குள்ள குடியானவர்கள் பருத்தியையும் சித்திரை சோளத்தையும் மாறி மாறி பயிரிடலாம் என்று கூறப்படுகிறது.

கொள்ளைக் கூட்டத் தலைவர் கைது

பாரிஸ், ஜூலை 3—

பிரான்ஸ், பெல்ஜியம், ஸ்விட்ஸர்லாந்து ஆகிய நாடுகளில் தங்கள் கைவரிசைகளை காட்டிவந்த ஒரு கொள்ளைக் கூட்டத் தலைவர் கைது செய்யப்பட்டார். இவர் ஒரு கார் கம்பெனியின் டைரக்டராம். இவர் ஏற்கனவே பன்முறை தண்டனை பெற்றவராம். இவர் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டதாகத் தெரிகிறது. இவருடைய கொள்ளைக் கோஷ்டியில் பெரும்பாலோர் இதாலியர்களாம். (குளோப்)

புகையிலை வரிமூலம் பாதுகாப்பு

சிங்கப்பூர், ஜூலை. 3—

சிங்கப்பூர் பாதுகாப்புக்கான செலவை ஈடுகட்ட புகையிலைவரியை அதிகரிக்க சிங்கப்பூர் சட்டசபையில் சர்க்கார் கொண்டுவந்த பிரேரணை ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

இப்புது வரி உயர்வு மூலம் வருஷத்திற்கு ரூபாய் 78 லக்ஷம் வருமானம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

கொரியாவுக்கு பிரிட்டிஷ் துருப்புகள்

லண்டன், ஜூலை 3—

பிரிட்டிஷ் தன் துருப்புகளை உடனேயே கொரியாவுக்கு அனுப்பிவிடாது என்று, இங்குள்ள விஷயமறிந்த வட்டாரங்களில் கூறப்படுகிறது. ஆனால், இந்த செய்தி இன்று நடைபெறும் மந்திரிசபைக் கூட்டத்திற்குபின்பே ஊர்ஜிதமாகும்.

பிரிட்டன், கொரியாவில் நேரடியான நடவடிக்கையில் கலந்துகொள்வதற்கு முன்பு, பிரிட்டிஷ் யுனைடெட் ஸ்டேட்ஸ் சர்க்கார் கலந்து முடிவு செய்யும்.

பிரிட்டன் மலேயாவிலும், பிரான்ஸ் இந்தோ சீனாவிலும் ஏற்கனவேயே ஏராளமான பொறுப்பை ஏற்றிருக்கிறது என்றே, இவைகள் உடனடியாக கொரியா போரில் கலந்து கொள்ளாமலிருப்பதற்குக்காரணம்என்று, சொல்லப்படுகிறது. —குளோப்

"இலட்சிய வரலாறு" வழக்கு தள்ளுபடி

சென்னை, ஜூலை 3—

'இலட்சிய வரலாறு' என்னும் நூலின் ஆசிரியரான தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் மீதும், தோழர்கள் கண்ணப்பன், டி. வி. முத்துகிருஷ்ணன் (வெளியிட்டோர்), ராதாகிருஷ்ணன் (அச்சிட்டவர்) ஆகியோர் மீதும் அரசியலாரால் தொடரப்பட்டிருந்த வழக்கின் முடிவு, இன்று சென்னை மாகாண மாஜிஸ்ட்ரேட் அவர்களால் தீர்ப்பு கூறப்படுகையில்:—

"இவ்வழக்கு எந்த செக்ஷன்படி தொடரப்பட்டதோ, அதற்கு சிறிதும் ஆதாரமில்லையாதலாலும், 'லட்சிய வரலாறில் அரசியலாரால் கொண்டுவரப்பட்டிருந்த 153-எ,பிரிவுக்குச் சிறிதும் ஆதாரமில்லை" என்று தான் அபிப்பிராயப்படுவதாகக்கூறி, வழக்கைத் தள்ளுபடி செய்து, அண்ணாதுரை உட்பட நால்வரையும் விடுதலை செய்வதாக அறிவித்தார்.

இன்று இவ்வழக்கின முடிவு கூறப்படும் என்ற செய்தியை அறிந்த சென்னைப் பொது மக்கள், கோர்ட்டில் ஏராளமாகக் கூடியிருந்தனர்,

தோழர் சி. என். அண்ணாதுரை அவர்களும், மற்ற மூவரும் கோர்ட்டுக்குச் சரியாக 11-மணிக்கு வந்தனர்.

பகல்1-30 மணிக்குமாஜிஸ்ட்ரேட் தமது தீர்ப்பைக் கூறினார்.

இவ்வழக்கில் தோழர் அண்ணாதுரை சார்பில், வழக்கறிஞர் நாராயணசாமி அவர்களும், தோழர்கள் முத்துகிருஷ்ணன், கண்ணப்பன் ஆகியோர் சார்பில், வழக்கறிஞர் பார்த்தசாரதி நாயகர் அவர்களும் வாதாடினர்.

தீர்ப்பு கூறியவுடன் கோர்ட்டுக்கு வெளியே கூடியிருந்த பொது மக்கள், அண்ணாதுரை அவர்களுக்கும் மற்ற மூவருக்கும் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

இன்று கோர்ட்டுக்கு தோழர்கள் டி. எம். பார்த்தசாரதி, என். வி. நடராசன், எஸ். வி. லிங்கம், டபிள்யூ. கே. தேவராசன், சி. வி. ராசன், வி. முனுசாமி, ராஜகோபால் மற்றும் பலர் வந்திருந்தனர்.

விவரம் பின்னர்வரும். (க.வி.)

'தாக்குதலை சமாளிக்க முடியவில்லை'

தென் கொரியாவின் ஓலம்

டோகியோ, ஜூலை 3—

ஹான்நதியை ஏராள கம்யூனிஸ்டுகள், படகுகள் மூலம் கடந்து வருகின்றனர்என்றும், இதுவரை வடகொரிய டாங்கிகளைத் தென்கொரியப் படை சமாளிக்க முடியாததால், கம்யூனிஸ்டுகளின் இப்புது நடவடிக்கை மிகவும் ஆபத்தானது என்றும் மக்ஆர்தர் தலைமைக் காரியாலயம் அறிவிக்கிறது.

இப்பொழுது அமெரிக்க துருப்புகளும், டாங்குகளும் தென்கொரியாவுக்கு வர ஆரம்பித்துவிட்டன.

பிரிட்டனின் மிகப் பெரிய விமானம்

லண்டன், ஜூலை 3—

பிரிட்டன் தயாரித்துள்ள ராக்ஷஸ விமானம் பிராடலான் உலகைச் சுற்றிவர திட்டங்கள் தயாரிக்கப்பட்டு விட்டன. இவை அங்கீகரிக்கப்பட்டவுடன், விமானம் உலக யாத்திரைக்குப் புறப்பட்டு, இவ்விமானத்தை இந்தியர்கள், பாகிஸ்தானிகள் பார்க்க வசதி அளிப்பதும் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறதாம்.

'பிராடலான்' [illegible]லண்டனி[illegible]ருந்து [illegible] [illegible]சுமாக [illegible]ளம்பி மேற்[illegible]ாக 5 [illegible]னங்களில் [illegible]சுற்றி விட்டு வ[illegible].

இதுவரை 906 சிவிலியன்கள்படுகொலை

குலாலம்பூர், ஜூலை 3—

மலேயாவில் அவசர நிலைமை ஏற்பட்டதுமுதல் ஜூன் 30 தேதிவரை 1241 கொள்ளைக்காரர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். 668 கொள்ளைக்காரர்கள் பிடிபட்டிருக்கிறார்கள். 85 பேர்களை காயமடைந்து தப்பிவிட்டனர்.

மேமாதம் முடியும் வரை 906 சிவிலியன்கள் கொலை செய்யப்பட்டிருக்கின்றனர். 299 பேர் கடத்தி செல்லப்பட்டிருக்கின்றனர். 527 பேர் காயமடைந்திருக்கின்றனர்.

மலையாளத்திற்கு கால்நடைப் பண்ணை

சென்னை, ஜூலை 3—

மலபார் ஜில்லாவிற்கு கால்நடைப் பண்ணை ஏற்படுத்தும் திட்டத்திற்கு சர்க்கார் சாங்ஷன் செய்திருக்கின்றனர். இதை அமுல்படுத்துவதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன. —குளோப்

மலேயாவில் 'ஹோம்கார்டு' படை

லண்டன், ஜூலை 3—

மலேயாவில் போலீசாருக்கு உதவியாக இருப்பதற்காக ஆயுதம் தரித்த 'ஹோம் கார்டு' (ஊர்காப்பு) படையை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு துப்பாக்கி கொடுக்கப்படுமாம். —குளோப்

தி. மு. கழகச் சொற்பொழிவு

5-7-50

கள்ளக்குறிச்சி:—சி. பி. சிற்றரசு.

வேலியே பயிரை மேய்கிறது!

———(0)———

அமைச்சரின் திருட்டு அம்பலத்துக்கு வந்தது

புதுடில்லி, ஜூன் 30—

சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று, யமுனை பாலத்திற்கருகே உத்திரப் பிரதேச மந்திரியொருவரின் கார், டில்லி போலீசாரின் சோதனையில் அகப்பட்டது. அக்காரில் பிரயாணம் செய்தவர் யாரென முதலில் போலீசாருக்குத் தெரியாது. அதை ஓட்டிவந்த டிரைவர் அகம்பாவத்துடன் பேசவே, சாமான்கள் வைக்குமிடத்தைத் திறந்து காட்டும்படி அதிகாரிகள் உத்தரவிட்டனர்.

சாமான்கள் வைக்குமிடத்தில், படுக்கைக்குப் பின்புறத்தில் இரண்டு மணங்கு கோதுமையும், ஒரு மூட்டை டேராடூன் அரிசியும் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. பங்கீட்டுச் சட்டத்தை மீறியதாக வழக்கொன்றைப் போலீசார் பதிவு செய்யமுயற்சித்தபோது, தாம் யாரென்பதை அம்மந்திரி மிக அமைதியுடன் தெரிவித்துக் கொண்டார். உடனே, அவ்விஷயம் ஒருவருக்கும் தெரியாமல் அடக்கிவைக்கப்பட்டது. (பிளிட்ஸ்)

இந்தியாவுக்கு 100 என்ஜின்கள்

100 ரயில்வே எஞ்ஜின்களுக்கென இந்தியா, ஸ்காட்லாந்திலுள்ள நார்த் பிரிட்டிஷ் லோகா கம்பெனியிடம் ஆர்டர் கொடுத்துள்ளது. இவைகளில், சில மிகப் பிரமாண்டமான எஞ்ஜின்களாகும். இந்த ஆர்டரபடி கம்பெனி தயாரித்து வரும் ரயில்வே எஞ்ஜின்களில், இரண்டு தற்போது இந்தியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இந்த இரு எஞ்ஜின்களுடன், பல்வேறு பாகங்களாகிய 25 செட்டுகளும் அனுப்பப்பட்டுள்ளன. இவைகள் எல்லாம் கல்கத்தாவுக்கருகிலுள்ள சித்தரஞ்சன் லோகோ தொழிற்சாலையில் ஒன்று சேர்க்கப்படும். இந்திய ஆர்டரைத் தவிர, இந்த பிரிட்டிஷ் தொழிற் ஸ்தாபனம் ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா நாடுகளுக்குமென ரயில்வே எஞ்ஜின்கள் கட்டி வருகிறது.

ரோமர்கள் காலத்திய மாதா கோவில்

டமாஸ்கஸ், ஜூலை 3—

ரோமர்கள் ஆண்ட காலத்தில் இருந்ததாகக் கருதப்படும் ஒரு மாதா கோவில் அலெப்போ அருகில் பூமியில் புதையுண்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதில் அவர்களின் அருமையான சித்திரங்கள் வரையப்பட்டிருக்[கின்]றன.

இமயமலைக்குச் சென்ற தூதுக்குழு

புதுடில்லி, ஜூன் 30—

இமயமலையில் 26,000 அடி உயரமுள்ள மிக உயர்ந்த சிகரமான அன்னபூர்ணாவுக்குச் சென்று வெற்றிபெற்ற எட்டுப்பேர்களடங்கிய பிரெஞ்சு தூதுகோஷ்டி, அடுத்தமாதம் 10-ம் தேதியன்று பாரிஸுக்கு செல்லும் வழியில், புதுடில்லிக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தூதுகோஷ்டியில் அதன் தலைவரான ஹெர்ஜாக் உட்பட, இருவர்தான் சிகரத்தை எட்டிப்பிடிக்கையில் இயற்கையின் போராட்டத்திலகப்பட்டு உடல்நலம் பாதிக்கப்பட்டனர். மற்றவர்கள் மிகவும் நல்லமுறையிலேயே இருக்கின்றனர். வைத்திய உதவிகள் பெறுவதற்காக ஹெர்ஜோக், வெகு விரைவில் பாரிசுக்குப் புறப்பட்டுச் செல்வார். மற்றவர்கள் சிறிதுகாலம் டில்லியில் தங்கியிருப்பார்கள்.

தூதுகோஷ்டி தரும் விரிவான தகவல்கள், விரைவிலேயே வெளிவருமென எதிர்பார்க்கப்படுகிறது.

8000 ஆண்டுகட்குமுன் எகிப்தியர் வாழ்க்கை

கெய்ரோ, ஜூலை 3—

கெய்ரோவுக்கருகாமையிலுள்ள ஒரு புராதனமான கிராமத்தில், பூமியிலிருந்து மனிதர்கள் பிராணிகளின் எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இவை 8000 ஆண்டுக்கு முற்பட்டதாகுமாம்.

இந்த எலும்புகள் கிடந்தமாதிரியிலிருந்து எகிப்தியர்கள் அக்காலத்தில் 6 அடி உயரத்திற்குக் குறையாமல் இருந்திருக்க வேண்டும் என்றும் சவங்களை கிழக்குமுகமாக உட்காரவைத்துப் புதைப்பது அக்காலத்திய வழக்கமாக இருக்க வேண்டும் என்றும் தெரிகிறது.

இந்த எலும்புக் கூடுகளின் பற்கள் இன்னும் உறுதியாக இருக்கின்றனவாம்.

சில நாய்களின் எலும்புகளும் அகப்பட்டிருப்பதிலிருந்து, நாய்கள் மிக அன்புடன் வளர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் கருதப்படுகிறது.

தென் கொரியர்களின் தீவிரம்

டோக்கியோ, ஜூலை 3—

தென் கொரியர்கள் மிகத் தீவிரமாகவே போரிடுவதாக மக் ஆர்தர் ஆலோசகர்கள் கூறுகிறார்கள். அமெரிக்க துருப்புகளைத் தொடர்ந்து டாங்கிகள், பீரங்கிகள் முதலியன தென்கொரியாவில் சீக்கிரமே வந்திறங்கும் என்று இவர்கள் கூறுகின்றனர்.

—————

[illegible]ஹாம், ஜூலை 3—

பிரிட்டி[ஷ்] [illegible]யர் 'கென்[illegible]' இங்கு [illegible] சேர்ந்திருக்கி[றது.] இதைச் [illegible] ஹாங்காங்கி[லிருந்து] 6 கப்பல்க[ள்] [illegible] இருக்கின்றன. —[ரூ]ட்டர்

கொரியாப் போர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆபத்து! வந்தேவிட்டது" என்றெல்லாம் அமெரிக்க முதலாளித்வமும், அதன் அடிவருடும் நாடுகளும் அர்த்தமற்ற முறையிலே-அனாவசியமான போர் பீதியை மக்களுக்கு உண்டாக்கி வருகின்றன. அப்படிப்பட்டோரின் பேச்சு எழுத்து முதலியவற்றையும் தோழர் சிக்னேரின் மேலே தரப்பட்டிருக்கும் கருத்துரையினையும் ஒப்பிட்டுப் பார்த்து ஒரு முடிவுக்கு வரவேண்டியது நல்லறிவாளர் கடன்.

கொரியாப் போர், உலகப் போராக மாறாது என்பதை அறுதியிட்டுக் கூறுகிறார் தோழர் சிக்னேர். அதற்கு ஆதாரமாக அவர் எடுத்துக் காட்ட விரும்புவது மனிதத் தன்மை' ரஷியா பலம் பொருந்தியதோர் நாடு, அந்நாடு மனம் வைத்தால் எளிதில் உலகப் போரை மூட்டிவிட்டு வேடிக்கைப் பார்க்க முடியும். ஆனால், அதனை அந்நாடு விரும்பவில்லை என்பதைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறார் தோழர் சிக்னேர்

உண்மை இப்படியிருக்க, மேற்கு வல்லரசுகள் ஏன் இப்படித் துள்ளிக் குதிக்கின்றன என்ற கேள்வி எழக்கூடும். அதற்கும் தோழர் சிக்னேர் விளக்கமான விடை தருகிறார். 'காலம் செல்லச் செல்ல, உலகம்சமதர்மகோட்பாடுகளை அதிகமாகத் தழுவ ஆரம்பித்துவிடும். அதுகண்டு அஞ்சியே முதலாளித்வம் இங்ஙனம் துள்ளிக் குதிக்கிறது" என[்று]

எனவே இதிலிருந்து உண்மையிலேயே வலிய வம்புக்கு வருகிறவர்கள் மேலைநாட்டு வம்பர்களே என்பது தெளிவாகத்தெரிகிறது. தோழர் சிக்னேரின்கருத்துரைக்கேற்ப காணுமிடமெங்கும், கம்யூனிசம் பரவிவருவதை நாம் காண்கிறோம். இங்ஙனம், வேகமாகப் பரவிவரும் சமதர்மக் கருத்துடன் வலியமூட்டிக்கொள்ள முதலாளித்வ வல்லரசுகள் முனைவதாலேயே ஆங்காங்கு பலாத்காரங்கள் தோன்றுகின்றன. உண்மையைக்கூறவேண்டுமானால் இன்று உலகெங்கும் காணப்படும் கொடுஞ்செயல்களுக்குக் காரணம், முதலாளித்வ—ஏகாதிபத்ய வெறியர்களேயன்றி, சமதர்மவாதிகளல்ல என்பது வெள்ளிடைமலையென விளங்கும்.

தென் கொரியா நிலைமை மோசமாகிறது

லண்டன், ஜூலை 3—

தென் கொரியாவில்நிலைமை மோசமடைந்துவருகிறது என்றும், யுனைடெட் ஸ்டேட்ஸ் தீவிரமாக உதவி அனுப்பி யுத்தத்தை முடிக்கப்போகிறதா அல்லது அரைகுறையாக சைனிகளை அனுப்பி யுத்தம் நீடித்து நடக்கும்படி செய்யப் போகிறதா என்று இங்குள்ள வட்டாரங்களில் கேட்கப்படுகிறது.

ஐ. நா.வின் கௌரவத்தைக் [காப்பாற்ற]வேண்டும் என்றால், யுத்[த]ம் சீக்கிரம் முடிக்கப்பட வேண்டும் என்பதை, பொதுவாக எல்லாருமே ஒப்புக்கொள்கிறார்கள்.

கழக நடவடிக்கைகள்

அறந்தாங்கி:—புதிய நிர்வாகக்குழு அமைப்பதை முன்னிட்டு, அறந்தாங்கி தி. மு. க. கிளையின் உறுப்பினர்கள் கூட்டமொன்று ராஜேந்திர சோடாபாக்டரியில் 23-6-50 அன்று செயலாளர் ம. நடராசன் தலைமையில் நடைபெற்றது. பொருளாளர் [illegible] சுப்ரமணியத்தின் விலகல் ஒப்புக்கொள்ளப்பட்டது. பின் கீழ்கண்டபடி நிர்வாகக்குழு மாற்றி அமைக்கப்பட்டது. ப. நடராசன் செயலாளர், தற்காலிக பொருள் உறுப்பினர் மாவட்டக் கழகத்திற்கு ம. நடராசனும், கோ. வீராசாமியும், தேர்ந்தெடுக்கப்பட்டனர். அ. கி. கோவிந்தராசன் துணைச்செயலாளர். கோ. வீராசாமி விளம்பர உறுப்பினர். பி. உடையார்ன், இரா. சுப்பையா இரா. சத்திவேலு, அ. பொ தலைக்கண்ணன் கா. சந்தாசாமி, கா. காளை சுப. சதாசிவம், ம. சிவசாமி ஆகியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கழக கட்டிட நிதிக்கும் பணம் அனுப்புவதென்ற தீர்மானத்துடன் அ. கி. கோவிந்தராசன்நன்றி கூறவே நிர்வாக அமைப்புக் கூட்டம் முடிவுற்றது.

* * *

திருத்தங்கல்:—18-6-50 காலை நவீ சந்தவனத்தில், தி. மு. க. உறுப்பினர் கூட்டம் தோழர் டி. ஆர். நடராஜன் அவர்கள் தலைமையில் கூடியது. அதுபோது செயற்குழு புது ஆண்டிற்கு மாற்றியமைக்கப்பட்டது.

செயலாளர்:—எ. எஸ். கனி, துணைச் செயலாளர் ஆர். பொன்னுப்பாண்டியன், எஸ். வி. சென்னமூர்த்தி விளம்பர உறுப்பினர், பொருளாளர் பி. குருசாமி.

ஏனைய செயற்குழுவினர், எஸ். வி. சென்னமூர்த்தி, பு. மா. துரைசாமி, டி. ஆர். நடராஜன், எ. கே. குருசாமி, எம். சோலையப்பன், பு. குருசாமி, எஸ். காளியப்பன், கே. எஸ். பி. சீனிவாசன், எ. எஸ். கனி, எம். சோமநாதன், ஆர். பொன்னுப்பாண்டியன், ஜி. கருப்பையா, எம். எஸ். திராவிடமணி கழகவளர்ச்சிக்காக நிதிவசூலிப்பதற்கு செயற்குழு உறுப்பினர் ஒவ்வொருவரிடமும் ரூபாய் 1 வீதம் நன்கொடையாக வசூல் செய்ய முடிவு செய்யப்பட்டது. இத்துடன் செயலாளர் நன்றி கூறுதலுடன் கூட்டம் இனிது கலைந்தது.

* * *

நெல்லை:—இந்நகர் தி. மு. க. பொதுக் குழுவின் மூன்றாம் கூட்டம் கழகக் கட்டிடத்தில் 18-6-50 அன்று தோழர் வீரபாகு தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தின் இடைக்காலம் தற்காலிகமாக இருந்து வந்த செயற்குழு கலைக்கப்பட்டு, கீழ்கண்ட செயற்குழு ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்—வெ. வீரபாகு. துணைச்செயலாளர்-திருப்பாற்கடல் விளம்பர உறுப்பினர் இரா. இரா[ம]சந்திரன். பொருளாளர் இராசகோபால் ஏனைய செயற்குழுவினர் பே. ஆ. பால்பிச்சைபிள்ளை, இரா. பி. ச. ச. சீனிவாசன், கா. வைத்தியநாதன், மா. முருகன், மதிராசன், பாலையா, மீனாட்சிசுந்தரம். நாராயணன். கழகத்தின் துவக்க விழா ஜூலையில் கழகத் தோழர்களை அழைத்து நடத்துவதெனவும் இன்னும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டு கூட்டம் நன்றி கூறுதலுடன் முடிவுற்றது.

* * *

அம்மாப்பேட்டை, சேலம்:—18-6-50 இரவு தி. மு. கழகக் கொடியின் கீழ், பொதுக்கூட்டம், தோழர் எ. ஆர். சுப்பையன் அவர்கள் தலைமையில் கூடியது. அதுபோது, 'ஆரியமும், திராவிடமும்' என்னும் பொருள்பற்றி, தோழர் எஸ். விஸ்வநாதன் அவர்கள் இசைப்பாடல்களுடன் சொற்பொழிவாற்றினார். தோழர்கள் ரவீந்திரன், எ[ஸ்.] பி. வள்ளியப்பன், கே. எஸ். அ[illegible]ம், ஸ்டாலின்,

கே. இராமசாமி, என். ஈஸ்வரபிள்ளை, ஆகியோரும் விளக்கமாகப் பேசினர். தலைவர் முடிவுரைக்குப்பின், கூட்டம் முடிவுற்றது.

* * *

மதுரை:—வடக்குவட்டாரதாமக்கர் புதுத்தெரு தி. மு. க. சார்பில் வட்டார அமைப்புக்குழுக் கூட்டம் தோழர் அ. பிச்சை அவர்கள் இல்லத்தில் அவர் தலைமையிலேயே நடந்தேறியது.

புதுத்தெருஅமைப்புக்குழுவினர் "அர்ச்சுனன் நினைவு மன்றம்" ஒன்று திறவினர் அதற்குக் கீழ்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—சோ. நாகராசன், துணைச்செயலாளர்:— [illegible], பொருளாளர்:—இந்திரஜித்து விளம்பர உறுப்பினர்:— ம. [ச]ண்முகம், 7 பேர் கொண்ட ஏனைய செயற்குழுதேர்ந்தெடுக்கப்பட்டது.

கழகம் ஆற்றவேண்டிய பணிகளைப்பற்றிதோழர்கள் அ. பிச்சை, அ. ரங்கநாதன், சோ. நாகராசன் முதலியோர் பேசினர். தலைவர் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

* * *

நிட்டக்குடி:—18-6-50 காலை பன்னீர் சோடா, நிலையத்தில், தி. மு. கழக செயற்குழுக் கூட்டம் தோழர் க. முருகன் தலைமையில் கூடி சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தோழர் மூ. துரைசாமி அவர்கள் 12-6-50 திராவிட பெரியாரை எதிர்த்து இக்கழகம் நீக்காதவாறு கொண்டிருப்பதுடன், அன்னார், குமேசுவரி [illegible], தமது ஆத்ம அனுதாபத்தைத்தெரிவித்து கொள்ளுகின்றது. விரைவில் ஒருகழகநூல்நிலையம் கட்டப்படவேண்டுமென்றும், அதற்காக தோழர் கா. பழனிஆண்டி அவர்களை, பொருளாளராக இருந்து கட்டடத்தை நடத்திக்கொடுக்க வேண்டும் என்று இக்கழகம்கேட்டுக் கொள்கிறது.

கழக வரவு செலவுகளை அங்கத்தினர்களுக்கு வாசித்துக்காட்டி ஒப்புக்கொள்ளப்பட்டு, மீதி ரூபாய் பதினாறும், அணா ஒன்றேகால் மட்டும் இருப்பு இருக்கிறதென தீர்மானிக்கப்பட்டு செயலாளர் நன்றி கூறுதலுடன் கூட்டம் இனிது முடிந்தது.

* * *

சச்சமங்கலம்:—தி. மு. கழகப் பொதுக்குழுக் கூட்டம் 18-6-50 காலை கூடியது. இதுவரைப் பணியாற்றிவந்த இடைக்காலச் செயற்குழு கலைக்கப்பட்டு, புது ஆண்டிற்கு ஒரு புதிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—ச. முத்தீஸ்வரன், துணைச்செயலாளர்:—க. இருட்டப்பசாமி, அ. முத்து, பொருளாளர் [illegible] அரங்கராசன், கே. பாலசுப்ரமணியன், வி. உறுப்பினர் வே. இராமையன், ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:—மா. கோ. சாமி. மூ. பழனியாண்டி. கி. பிச்சைநாதன், தி. மா. சுந்தரராசன்.

* * *

செங்கோட்டை:—தி. மு. க.செயற்குழுக் கூட்டம் தோழர் வீ[ர]பாகு தலைமையில் 28-6-5[0] புதன்கிழமை கழகக் கட்டிடத்தி[ல்] கூடியது. அதுபோது கீழ்கண்ட தீர்மானங்கள் [illegible] நி[றை]வேறின. தற்காலிக செ[ய]ற்குழு [illegible] 5-2-50 முதல் 18-[illegible] வரையுள்ள கணக்குகளை [illegible] குழு ஒப்புக்கொண்[டது] [illegible] வில் துவக்க விழா [illegible] நன்கொடை பணம் [illegible] தோழர்கள் இரா. [illegible] கோபால், க. க. [illegible] இ. நாராயணன் [illegible] இக்குழு நியமிக்கிற[து] [illegible]

தேர்தல்கள் நல்ல முறையில் நடைபெற வேண்டும்

(:0:)

மாற்றுக் கட்சிகள் மாநாட்டில் ஆலோசனை

பம்பாய், ஜூலை 1— ...ர்தல்கள் நியாயமாகவு ...ஜசயமாகவும் நடப்பது ...ற ஆலோசிக்க இன்று ...ங்கு கூடிய எதிர்க்கட்சிகள் மாநாட்டில் டாக்டர் ஆர். பி பரஞ்ஜ்பை தலைமை வகித்துப் பேசுகையில் அடுத்து நடக்க விருக்கும் பார்லிமெண்ட் தேர்தலில் பல மெம்பர் தொகுதி முறையையும் குவியல் வோட்டு முறையையும் அனுஷ்டிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் பிற்பட்டோர் லீக் இந்துமகா சபை கனதந்திர பரிஷத் மிதவாதக் கட்சி (நேஷனல் லிபரல் பெடரேஷன்) பம்பாய் மாகாணசங்கம் சோஷலிஸ்ட்கட்சி, அகில இந்திய அகதிகள் சங்கம் ஆகிய கட்சிகள் சார்பில் இந்த மகாநாட்டுக்குச் சுமார் 50 பிரதிநிதிகள் வந்திருக்கின்றனர். பண்டித எச். என். குன்ஸ்ரு, தோழர் என். ஸி. சட்டர்ஜி டாக்டர் என். பி. காரே மஹந்த் திக்வி ஜய்நாத ஆகியோரும் மாநாட்டுக்கு வந்திருந்தனர். சோஷலிஸ்டுத் தலைவர் தோழர் ஜயப்பிரகாஷ் நாராயணன் இந்த மாநாட்டைக் கூட்டியிருக்கிறார்.

அனைவரையும் தோழர் ஜயப்பிரகாஷ் வரவேற்றுப் பேசுகையில், அடுத்து வரும் தேர்தலில் காங்கிரஸ் கட்சி, சர்க்கார் சாதனங்களையும் பணத்தையும் உபயோகித்துக் கொள்ளுமோ என்ற அச்சம் கற்பனையல்லவென்றும் தேர்தல் கூடிய வரையில் நியாயமாக நடப்பதற்கான முறைகள் பற்றி ஆராய்ந்து அவற்றை அமல் நடத்துவதற்கே இந்த மாநாடு கூட்டப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

தலைமையுரை

டாக்டர் பரஞ்ஜ்பை தலைமை வகித்துப் பேசுகையில் வகுப்பு வாதத் தொகுதிகள் ரத்து செய்யப்பட்டது மிகவும் சரியானகாரியமென்றும், ஆனால் சிறுபான்மையினருக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்கும் பொருட்டுப் பல மெம்பர் தொகுதிகளை ஏற்படுத்துவது அவசியமென்றும் பரவல் வோட்டு முறையினால் சிறுபான்மையினருக்குச் சரியான பிரதிநிதித்துவம் கிடைக்குமென்றும் தேர்தலில் பாஸிஸ்டு அல்லது போல்ஷிவிக் ஆட்சிகள் அனுஷ்டிக்கும் முறைக்கும் ...ம்பாய் சர்க்கார் அனுஷ்டிக்...ம் முறைக்கும் அதிக வித்தி...சமில்லை யென்றும் கூறி...

...பர்மாவில் ...கை அமைச்சர்

...ங்கன் ஜூலை 3— ...மந்திரி தோழர் ...போனசேகா ...கு வந்து சேர்ந் ...அவர் பர்மிய ...விருந்துக்கு ...ர்மியர்களை ஆச்சரி...ளாக்கி விட்டது.

பிறவிக் குருடு குறைகிறது

லண்டன், ஜூலை 3— பிறவிக்குருடர்களாக பிறப்பவர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து வருகிறதென்றும், நவீன மருந்துகளான பென்ஸிலின் போன்றவைகள், இதற்குக் காரணம் என்று புரபஸர் ஞாக்ஸ்பி என்பவர் இங்கு குறிப்பிட்டார்.

இங்கிலாந்து வேல்ஸ் ஆகிய இடங்களிலுள்ள 76000 குருடர்களில் சுமார் 10000 பேர்களுக்கு கண்பார்வை போனது தொத்துவியாதிகளின் காரணமாகவேதான் என்றும், நாளடைவில் குருடர்களின் எண்ணிக்கை குறைந்துவிடும் என்றுதான் எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறுகிறார்.

தோழர் மேஹரலி மறைந்தார்

பம்பாய் ஜூலை 2— முக்கிய சோஷலிஸ்ட் தலைவரும், முன்னாள் பம்பாய் மேயருமான தோழர் யூஸுப்மேஹரலி, இன்று காலை நகரிலுள்ள ஒரு நர்ஸிங்ஹோமில் இயற்கை யெய்தினர். அவரது வயது 44, அவர் இயற்கையெய்தியமைக்குக் காரணம், இருதய நோய் என்று அறியப்படுகிறது.

சென்னை மேல்சபை

ஆரம்ப ஆசிரியர்கள் வாக்காளர்களாகச் சேரலாம்

சென்னை, ஜூலை 3— செகண்டரி பள்ளிக்கூடங்களைச் சேர்ந்த ஆரம்ப வகுப்பு ஆசிரியர்களும் சென்னை கௌன்ஸில் ஆசிரியர் தொகுதிக்கு வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்ளப்படுவார்கள் என்று சென்னை ராஜ்ய தேர்தல் கமிஷனர் அறிவிக்கிறார். தனிப்பட்ட ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் இத்திட்டப்படி வாக்காளராகச் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள் என்றும் தேர்தல் கமிஷனர் தெளிவுபடுத்துகிறார்.

வட்டமேஜை மாநாட்டில் இந்தியா பங்குகொள்ளாது

(0)

இனவட்டார மசோதா நிறைவேற்றப்பட்டதற்குக் கண்டனம்

புதுடில்லி, ஜூலை 1— தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்னை குறித்து ஆலோசிப்பதன் பொருட்டு, தெ. ஆ. சர்க்கார் நடத்த உத்தேசித்துள்ள வட்டமேஜை மாநாட்டில் கலந்துகொள்ளுவதில்லை என, இந்திய சர்க்கார் ஏற்கனவே செய்துள்ள முடிவை இப்போது மீண்டும் உறுதி செய்துள்ளனர்.

இனவட்டார மசோதா பற்றி தெ. ஆ. சர்க்காரின் கொள்கை கேப்டவுன் மாநாட்டின் போதே இந்தியாவுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது என, தென்னாப்பிரிக்க சர்க்கார் கூறுவதையும் இந்திய சர்க்கார் வன்மையாக மறுக்கின்றனர்.

ஜூன் 14ந் தேதி தென்னாப்பிரிக்க சர்க்காரிடமிருந்துவந்த தந்திக்கு, இந்தியா தனது இறுதி பதிலை நேற்று அனுப்பிவைத்தது வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொள்ளப் போவதில்லை என்பதே இந்தியாவின் பதில்.

மாநாட்டில் கலந்துகொள்வதில்லை என ஏற்கெனவே இந்தியா செய்துள்ள முடிவைப் புனராலோசனை செய்யுமென தெ. ஆ. சர்க்கார் தன் தந்தியில் வேண்டிக்கொண்டிருந்தது.

இந்திய சர்க்கார் தம் பதிலில் கூறுவதாவது:—

இனவட்டார மசோதாவை தென்னாப்பிரிக்கா நிறைவேற்றியது. இந்திய மக்களிடையேயும். தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்தியரிடையேயும் அதிக ஆத்திரமேற்படுத்தியுள்ளது. வட்டமேஜை மாநாடு முடிவடையும் வரை ஆசியர்களுக்கு விரோதமான இந்த மசோதாவை ஒத்திப்போட வேண்டுமென்ற இந்தியாவின் கோரிக்கைக்கு, தெ. ஆ. சர்க்கார் இணங்கியிருந்தால், மாநாட்டின் முடிவு குறித்து இந்திய மக்கள் நம்பிக்கைக் கொண்டிருந்திருப்பர். அத்துடன் தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்தியர்-பாகிஸ்தானிகள் சம்பந்தமான கட்டுப்பாடுகளைக் கடுமையாக்காமல் நீக்க வேண்டுமென்று, இந்தியாவின் யோசனைகள் பற்றி தெ. ஆ. யூனியன் பிரதிநிதிகள் மாநாட்டின்போது பரிசிலனை செய்வதும் சுலபமாக இருந்திருக்கும்.

தங்கள் ஒதுக்கல் கொள்கையையே தொடர்ந்து கடைபிடிக்க, தெ. ஆ. சர்க்கார் முடிவு செய்துள்ளதையே புதிய சட்டம் தெளிவாக உணர்த்துகிறது, இவ்வித சந்தர்ப்பத்தில் உத்தேச வட்டமேஜை மாநாடு தற்போது நடைபெறுமானால், அது ஒரு தலைப்பட்சமானதாகவே இருக்கும் என்ற இந்திய சர்க்காரின் அபிப்பிராயம் முற்றிலும் நியாயமானதென்று நிரூபணமாகிவிட்டது. எனவே வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொள்வதில் உருப்படியான பலன் ஏதும் ஏற்படாதென்று இந்திய சர்க்கார் மீண்டும் ஊர்ஜிதம் செய்யவேண்டி ஏற்படுகிறது.

சென்னை, ஜூலை 3— கிரஸின் கட்டுப்பாடு ரத்தாகிவிட்டதால் சென்னையில் கிரஸின் விலை புட்டி ஒன்றுக்கு ரு 0-3-3 லிருந்து ரு 0 3-க்கு குறைந்திருக்கிறது.

மாடர்ன் தியேட்டர்ஸ்.....
மந்திரி குமாரி
சென்னை
பாரகன் & பிராட்வே
தினசரி 3 காட்சிகள்
2·30 மணி
6 · மணி
9·30 மணி
இரண்டு தியேட்டர்களிலும் தினசரி காலை 9 மணி முதல் 12 மணிவரை முதல் இரண்டு வகுப்புகளுக்கு டிக்கட்டுகளை ரிஸர்வ் செய்து கொள்ளலாம்..........
BAKTHA.

C N அண்ணாதுரை M A, பாரதிதாசன்,
அ. இளங்கோவன், வாணிதாசன்,
வழிப்போக்கன், தமிழரசன்
ஆகியோரின் எழுத்தோவியங்களுடன்
தேன் கூடு
ஜூலை இதழ் விரைவில் வெளியாகிறது
தனிப்பிரதி 2 அணா ஆண்டு சந்தா ரு 1—8—0
பிரதிக்கு 4 அணா முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை
நிர்வாகி தேன் கூடு
7. வெண்கலக்கடை முதல் தெரு, மதுரை.

பெண்ணாடத்தில் மணவாளராமாநுஜருக்கு வரவேற்பு

பெண்ணாடம், ஜூலை 1— 25-6 50 அன்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர் அறிஞர் தோழர் எஸ். ஜி. மணவாள ராமாநுஜம் அவர்கட்கு வெகுகுநாதன் கழகம், டெல்டா தமிழ்ச் சங்கம், ஆசிரியர் கழகம், உயர்நிலைப் பள்ளி முன்னேற்றக் குழு முதலிய கலைகளின் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

அவ்வரவேற்பில் பி. ஓ. எல். பட்டம், புலவர் போதனாமுறை வகுப்பு, விவசாயப் பட்டம், சட்டப்பட்டம், பி. காம் பட்டம் முதலியனபற்றி குறிப்பிடப்பட்டிருந்தன.

வரவேற்பிற்குப் பதில் அளிக்கையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இருந்த புலவர் போதனா முறைவகுப்பைத் திரும்பவும் ஆரம்பிக்க ஏற்பாடு செய்ததாகவும் ஆனால், சர்க்கார் 'கிராண்ட்' கொடுக்காததால் கைவிடப்பட்டதாகவும் கூறினர். தமிழாசிரியர்கள் கிராண்டுக்கு சர்க்காரிடம் முறையிட்டுக் கொடுக்கச்செய்ததால், திரும்பவும் கல்லூரியில் தொடங்குவதாக அறிவித்தார். வித்வான்கள் பி. ஓ. எல். பட்டம் பெற, தமிழை மீண்டுமொரு முறை எழுதாமல் ஆங்கிலம் மட்டும் எழுதி பி. ஓ. எல். பட்டம் பெறுவது பற்றி குறிப்பிடுகையில், அந்த முறை சரியானதல்ல வென்றும், மேலும் பி. ஓ. எல். பட்டபடிப்பிற்கும், வித்வான் பாடத்திட்டத்திற்கும் வேறுபாடு இருக்கிறது ...ன்றும் விளக்கினர். ...ளித்த ...றையில்படித்து Gra... ...) தேர்வு எழு... ...பற்றிப் ...கையில். ...க்கின் ...பொச்சம்; படிக்... ...செல்வது மட்டுமல்லவென்றும், நல்ல பழக்க வழக்கங்கள், மாணவர்கள் சமூகத் தொண்டாற்றும் முறை ஆகியவற்றை அளிப்பதென்றும் அறிவுறுத்தினர்.

இறுதியில் தமக்களித்த வரவேற்பிற்காக நன்றி தெரிவித்து, கழகம் செய்துவரும் தொண்டைப் பாராட்டி மேலும் கழகம் வளர வாழ்த்து கூறினர்.

அன்றுமாலை 6 மணிக்கு கழகச் செயற்குழு உறுப்பினர் தோழர் சு நாராயணசாமி அவர்கள் பி. எல் ஸி. தமிழ்வேந்தருக்குத் தேனீர் விருந்து அளித்தார். விருந்தில் கழக உறுப்பினர்களும், பல பிரமுகர்களும் கலந்துகொண்டனர் என, செயலாளர் எழுதுகிறார்.

ஏஜெண்டுகள் தேவை

நமது "மாலைமணி"யை விற்பனைசெய்ய முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் கள்கீழ்க்கண்ட இடங்களுக்கு தேவை

நாகை,
தஞ்சை,
மானேஜர்:—"மாலைமணி"

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty St. Madras-1